முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2025 யூலை

## (102) வியாபாரக் கணிதமும் புள்ளிவிபரவியலும்

(Business Mathematics and Statistics)

2025-08-03
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வைநிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வைநிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) ***சூத்திரங்களைக் கொண்ட தாள்கள்*** *இணைக்கப்பட்டுள்ளன.*

(9) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** $16 - y^2$ இன் காரணிகளாவன :

(1) $(4 - y)(4 - y)$ (2) $(4 + y)(4 + y)$

(3) $(4 - y)(4 + y)$ (4) $(4y - y)(4y + y)$ (03 புள்ளிகள்)

**1.2** **நிமால்** ஆண்டிற்கு 12% எளிய வட்டியில் வங்கியொன்றில் ரூ. 50,000/- ஐ முதலீடு செய்துள்ளார். 4 ஆவது ஆண்டின் இறுதியில் முதலீட்டு மீதான மொத்த வட்டி :

(1) ரூ.6,000/- (2) ரூ.24,000/- (3) ரூ.28,676/- (4) ரூ.12,720/-

(03 புள்ளிகள்)

**1.3** மாறிகள் $x, y$ தொடர்பான பின்வரும் பொழிப்பாக்கப்பட்ட தரவுகள் தரப்பட்டுள்ளன:

$$\sum x = 24\,,\quad \sum y = 179\,,\ \sum x^2 = 138\,,\ \sum y^2 = 6499\,,\quad \sum xy = 904\,,\quad n = 5$$

மேற்படி தரவுகளின் அடிப்படையில், $x$ மற்றும் $y$ இற்கிடையிலான இணைபுக் குணகமானது :

(1) 0.9132 (2) 0.0251 (3) 0.9321 (4) 0.9846

(03 புள்ளிகள்)

**1.4** 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கம்பனி ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் மூன்று பண்டக்குறிகளின் (brand) விலைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன :

| பண்டக்குறி | விலை ரூபா மில்லியனில் (2020) | விலை ரூபா மில்லியனில் (2024) |
|---|---|---|
| A | 1.5 | 4.3 |
| B | 3.0 | 7.2 |
| C | 2.5 | 6.8 |

2020 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பண்டக்குறி **C** ஐக் கொண்ட வாகனத்தின் விலைச் சார்பானது :

(1) 2.72% (2) 272% (3) 36.76% (4) 240%

(03 புள்ளிகள்)

**1.5** **நிஹால்** என்பவர் அரையாண்டிற்கு ஒரு முறை வட்டி கூட்டப்படுகின்றதும் 5% வருடாந்த வட்டியை வழங்குகின்றதுமான நிலையான வைப்பொன்றில் ரூ. 25,000/- ஐ முதலீடு செய்துள்ளார். 4 ஆண்டுகளின் பின்னர் நிலையான வைப்பின் முதிர்வுப் பெறுமதி *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) Rs.30,100/- (2) Rs.31,500/- (3) Rs.30,460/- (4) Rs.30,090/-

(03 புள்ளிகள்)

**1.6** இரண்டு சுயாதீன நிகழ்வுகள் **A, B** பற்றிய கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

$P(A) = \frac{3}{4}$ மற்றும் $P(B) = \frac{3}{5}$ ,

மேற்படி தகவல்களின் அடிப்படையில், $P(A \cap B)$ ஆனது :

(1) $\frac{9}{20}$ (2) $\frac{3}{20}$ (3) $\frac{3}{10}$ (4) $\frac{1}{20}$

(03 புள்ளிகள்)

**1.7** குறிப்பிட்ட 30 நிமிட காலப்பகுதியில் **'மல்லிகா கேக் கடை'** இனால் விற்பனை செய்யப்பட்ட கேக்குகளது (cake) எண்ணிக்கையின் நிகழ்தகவுப் பரம்பலை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| **விற்பனை செய்யப்பட்ட கேக்குகள் (X)** | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| **நிகழ்தகவு P($x$)** | 0.15 | 0.30 | 0.20 | 0.10 | 0.25 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **'மல்லிகா கேக் கடை'** இனால் விற்பனை செய்யப்பட்ட கேக்குகளின் எதிர்பார்க்கைப் பெறுமதி [Expected Value]:

(1) 3 (2) 1 (3) 5 (4) 2

(03 புள்ளிகள்)

**1.8** குறித்ததொரு பிராந்தியத்தில் உள்ள ஓய்வூதியதாரர்களின் வயதுப் பரம்பலை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| **வயது (ஆண்டுகளில்)** | 50-59 | 60-69 | 70-79 | 80-89 | 90-99 |
|---|---|---|---|---|---|
| **ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ($f$)** | 20 | 30 | 40 | 10 | 4 |

இந்தப் பிராந்தியத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் இடைய (median) வயது (அண்ணளவாக):

(1) 75 (2) 70 (3) 68 (4) 77

(03 புள்ளிகள்)

**1.9** **அசிந்த** என்பவர் வருடாந்தம் வட்டி கூட்டப்படுவதும் ஆண்டிற்கு 4% வட்டி வசூலிப்பதுமான வங்கி ஒன்றிடமிருந்து ரூ. 80,000/- கடனைப் பெற்றுள்ளார். கடனானது 3 ஆண்டுகளின் பின்னர் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். 3 ஆவது ஆண்டின் இறுதியில் **அசிந்தவால்** செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) ரூ. 3,200/- (2) ரூ. 6,528/- (3) ரூ. 9,989/- (4) ரூ. 10,093/-

(03 புள்ளிகள்)

**1.10** ஓர் உணவகச் சங்கிலியின் 2018 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியின் காலாண்டு விற்பனைப் பெறுமானங்கள் பின்வரும் பருவகால சுட்டிகளைத் துணிவதற்குப் பயன்படுத்தப்பட்டன :

| | **1ஆவது காலாண்டு** | **2 ஆவது காலாண்டு** | **3 ஆவது காலாண்டு** | **4 ஆவது காலாண்டு** |
|---|---|---|---|---|
| **பருவகாலச் சுட்டி** | 1.48 | 1.14 | 0.57 | 0.81 |

2024 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டிற்காக மதிப்பிடப்பட்ட போக்குப் பெறுமதி 8,560 ஆகும். 4 ஆவது காலாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட விற்பனைப் பெறுமதி *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) 12,669 (2) 4,880 (3) 6,800 (4) 6,934

(03 புள்ளிகள்)

***1.11 தொடக்கம் 1.13 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்தில் உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.***

**1.11** கீழ்வரும் அட்டவணையில் இடது பக்கம் தரப்பட்டுள்ள பதங்களை, வலது பக்கம் தரப்பட்டுள்ள பொருத்தமான விளக்கங்களுடன் தொடர்புபடுத்துக :

| **பதம்** | **விளக்கம்** |
|---|---|
| **(A)** கூட்டு வட்டி | **(1)** தரவு மாதிரி ஒன்றிலுள்ள பெறுமானங்களின் கூட்டுத் தொகையை மாதிரியில் உள்ள பெறுமானங்களின் எண்ணிக்கையால் வகுப்பது |
| **(B)** மாறல்திறன் | **(2)** முதல் தொகைக்காக திரட்டப்பட்ட வட்டியும் முன்னரே திரட்டப்பட்ட வட்டியும் |
| **(C)** இடை | **(3)** தரவுகளின் இடைப் பெறுமானத்தைச் சுற்றியுள்ள தரவுப் புள்ளிகளின் ஒரு தொகுதியினது சிதறலின் அளவீடு |

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

**1.12** ஒரு கடைக்காரர் வழங்குநர் ஒருவரிடமிருந்து ரூ. 1,000/- இற்கு ஒரு TV தொலைவியக்கியை வாங்கியுள்ளார். அவர் அதனை கிரயத்தில் 15% இலாப எல்லை வைத்து விற்பனை செய்ய விரும்புகிறார்.

TV தொலைவியக்கியின் விற்பனை விலையைக் கணிக்குக. (02 புள்ளிகள்)

**1.13** 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மூன்று பொருள்களின் விலைகளையும் கணியங்களையும் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| பொருள்கள் | கணியம் (அலகுகளில்) | | விலை (ரூ.) | |
|---|---|---|---|---|
| | 2023 ($q_0$) | 2024 ($q_1$) | 2023 ($p_0$) | 2024 ($p_1$) |
| A | 540 | 600 | 15 | 12 |
| B | 200 | 250 | 4 | 5 |
| C | 450 | 350 | 5 | 7 |

2023 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதுக.

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

2024 ஆம் ஆண்டிற்கான பாசேயின் விலைச் சுட்டியை (தற்போதைய நிறையேற்றப்பட்ட திரண்ட விலைச் சுட்டி) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

*கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் (**1.14** மற்றும் **1.15**) **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (**சரியானது / தவறானது**) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக:*

**1.14** பருவகால மாறல்கள் என்பது மீண்டும் மீண்டும் ஏற்படும் காலமுறையான ஏற்ற இறக்கங்கள் ஆகும். (01 புள்ளி)

**1.15** ஒரு கம்பனியின் காலாண்டு இலாபங்களுக்கான போக்குச் சமன்பாடு $T = 2000 + 250t$ எனத் தரப்பட்டுள்ளது. இங்கு "$t$" என்பது காலாண்டுகளின் காலம் ஆகும். இந்தக் கம்பனியின் ஒரு முகாமையாளர், மேலே உள்ள போக்குச் சமன்பாட்டின்படி, ஒவ்வொரு காலாண்டும் இலாபம் ரூ. 250/- இனால் அதிகரிக்கிறது எனக் கூறுகிறார். (01 புள்ளி)

(Total 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) **அமல், பிமல், சமல்** ஆகியோருக்கிடையே ரூ. 500,000/- காசு பகிரப்படுகிறது. **அமல், பிமல்** ஆகியோர் பெறுகின்ற தொகைகள் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் காணப்படுகின்றன. **பிமல், சமல்** ஆகியோருக்கிடையேயான விகிதம் முறையே 3 : 5 ஆக உள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**அமல்** பெறுகின்ற பணத் தொகையைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ரூ. 4,000/- பணமானது ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களிடையே பகிரப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் ரூ. 80/- ஐப் பெறுவதுடன் ஒவ்வொரு மாணவியும் ரூ. 40/- ஐப் பெறுகின்றனர். வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வகுப்பில் உள்ள மாணவன் மற்றும் மாணவியரின் எண்ணிக்கைகளைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **நெத்மி** என்பவர் ஒரு புதிய துவிச்சக்கர வண்டியை வாங்குவதற்காக ஒவ்வொரு வாரமும் பணத்தைச் சேமிக்கத் தீர்மானித்துள்ளார். முதலாவது வாரத்தில், அவர் ரூ. 500/- இனைச் சேமித்ததுடன் ஒவ்வொரு வாரமும் சேமிப்புத் தொகையை ரூ. 150/- இனால் அதிகரிக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

10 ஆவது வாரம் அவர் சேமிக்கின்ற பணத் தொகையைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

ஓர் உற்பத்தி நிறுவனம் பொருள் **X** இனை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனத்தின் மாதமொன்றிற்கான மொத்தக் கிரயச் (TC) சார்பு $1,800 - 6q + 24q^2$ உம் மாதமொன்றிற்கான கேள்விச் சார்பு $P = 24q - 3$ உம் எனத் தரப்பட்டுள்ளது.

(இங்கு "q" என்பது மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை ஆகும்.)

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) நிறுவனத்தின் மொத்த வருமானச் (TR) சார்பையும் எல்லைக் கிரயச் (MC) சார்பையும் **இனங்காண்க** (03 புள்ளிகள்)

(b) இலாப – நட்டமற்ற கணியத்தைக் **கணிப்பிடுக** (04 புள்ளிகள்)

(c) இலாப – நட்டமற்ற கணியத்தில் அலகொன்றின் விற்பனை விலையைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

பின்வரும் அட்டவணையானது கடந்த 7 ஆண்டுகளில் கம்பனியிலுள்ள மோட்டார் வாகனங்களின் வயதையும் அவற்றுக்கான பராமரிப்புச் செலவுகளையும் காட்டுகிறது :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **வயது ($x$) (ஆண்டுகளில்)** | 10 | 8 | 7 | 6 | 4 | 5 | 2 |
| **பராமரிப்புச் செலவுகள் ($y$)(ரூ.'000)** | 70 | 72 | 73 | 80 | 83 | 85 | 90 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி,

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) வாகனங்களின் வயதிற்கும் பராமரிப்புச் செலவுகளுக்கும் இடையேயான தொடர்பை பிரதிநிதித்துவப்படுத்தும் $y = a + bx$ என்ற வடிவிலான இழிவு வர்க்க முறைச் சமன்பாட்டை **அடையாளங் காண்க.** (08 புள்ளிகள்)

(b) மோட்டார் வாகனத்தின் வயது 12 ஆண்டுகள் எனின், கம்பனியின் எதிர்பார்க்கப்படும் வருடாந்த பராமரிப்புச் செலவைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

A/L மாணவர்களின் வாராந்தக் கற்றல் மணித்தியாலங்களைப் பதிவு செய்யுமாறு பாடசாலை ஆசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டனர். பாடசாலை ஒன்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் கூட்டமாக்கப்பட்டு, பொழிப்பாக்கப்பட்டு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வாராந்த கற்றல் மணித்தியாலம்** | 0 - 9 | 10 - 19 | 20 - 29 | 30 - 39 | 40 - 49 | 50 – 59 |
| **மாணவர்களின் எண்ணிக்கை ($f$)** | 5 | 8 | 12 | 20 | 9 | 4 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி,

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) ஆகாரம் (03 புள்ளிகள்)

(b) இடை (03 புள்ளிகள்)

(c) நியம விலகல் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) **சொய்ஸா** என்பவர் வங்கி ஒன்றிடமிருந்து ஆண்டிற்கு 20% வட்டியில் ரூ. 300,000/- கடனைப் பெற்றுக் கொண்டார். இது சமனான வருடாந்தத் தவணைக் கட்டணங்களாக 3 வருடங்களில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) கடனுக்கான வருடாந்த மீள்கொடுப்பனவைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கடனின் மீள்கொடுப்பனவைச் சித்தரிக்கின்ற கடன் தீர்ப்பனவு அட்டவணையைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) **ABC PLC** ஆனது இரண்டு (2) முதலீட்டுச் செயற்றிட்டங்களில் இருந்து (செயற்றிட்டம் **X**, செயற்றிட்டம் **Y**) சிறந்த செயற்றிட்டத்தைத் தெரிவு செய்வதற்குத் திட்டமிடுகிறது. ஒவ்வொரு செயற்றிட்டத்திற்குமான ஆரம்ப முதலீட்டுக் கிரயம் ரூ. 100,000/- ஆகவுள்ளதுடன் இரண்டு செயற்றிட்டங்களுக்குமான அடுத்த 4 ஆண்டுகளுக்கான நிகர காசு உட்பாய்வுகள் கீழ்வருமாறு :

| ஆண்டு / தெரிவு | 1 (ரூ.) | 2 (ரூ.) | 3 (ரூ.) | 4 (ரூ.) |
|---|---|---|---|---|
| X | 50,000 | 40,000 | 30,000 | 10,000 |
| Y | 10,000 | 30,000 | 40,000 | 50,750 |

கம்பனியின் கழிவுக் காரணி (மூலதனக் கிரயம்) ஆண்டிற்கு 10% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொரு செயற்றிட்டத்தினதும் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) NPV இன் அடிப்படையில், சிறந்த முதலீட்டுச் செயற்றிட்டத்தை காரணங்களுடன் **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(C) **நிமல்** என்பவர் அவரது பணியிடத்தை அடைவதற்கு 2 பேருந்துகளில் பயணிக்க வேண்டும். முதலாவது பேருந்து தாமதமாக வருவதற்கான நிகழ்தகவு 0.10 உம் இரண்டாவது பேருந்து தாமதமாக வருவதற்கான நிகழ்தகவு 0.3 உம் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி தரவுகளைக் காட்டுவதற்கு மரவரிப்படம் ஒன்றை **வரைக.** (02 புள்ளிகள்)

(b) ஆகக்குறைந்தது ஒரு பேருந்து தாமதமாக வருவதற்கான நிகழ்தகவைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(D) தனியுரிமை வியாபாரி ஒருவரின் தினசரி வருமானம் இடை ரூ. 50,000/- மற்றும் நியம விலகல் ரூ. 5,000/- கொண்ட ஒரு செவ்வன் பரம்பலில் உள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

தனியுரிமை வியாபாரியின் தினசரி வருமானம் ரூ. 55,000/- ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வைநிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |

# சூத்திரங்கள்

## கணித அடிப்படைக் கோட்பாடுகள்:

**இருபடிச் சமன்பாடு:**

$ax^2 + bx + c = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகள் பின்வருமாறு தரப்படும்

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

**கூட்டல் விருத்தி:**

n ஆவது உறுப்பு :

$T_n = a + (n-1)d$

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை :

$$S = \frac{n}{2}\{2a + (n-1)d\}$$

**பெருக்கல் விருத்தி:**

n ஆவது உறுப்பு :

$T_n = ar^{(n-1)}$

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை:

$S = a\frac{\{r^n - 1\}}{\{r-1\}}$ $r > 1$ ஆகும்போது

$S = a\frac{\{1 - r^n\}}{\{1-r\}}$ $r < 1$ ஆகும்போது

$S = na$ $r = 1$ ஆகும்போது

## நிதிக் கணியம் :

**எளிய வட்டி:**

$S = X(1 + nr)$

**கூட்டு வட்டி:**

$S = X\{1 + r\}^n$

**கழிவு:**

இற்றைப் பெறுமதி = எதிர்காலப் பெறுமதி $\times \frac{1}{(1+r)^n}$

**ஈட்டின் / கடனின் மீள்கொடுப்பனவு :**

$$A = \frac{SR^n(R-1)}{\{R^n - 1\}}$$

**விளைவு வட்டி வீதம்:**

EIR = $\{(1+r)^n - 1\}$ 100%

## எண்சார் விளக்க அளவிடைகள்:

**இடை $\bar{x}$ :**

கூட்டமாக்கப்படாத தரவு: $\frac{\sum x}{n}$

கூட்டமாக்கப்பட்ட தரவு : $\frac{\sum fx}{\sum f}$

**இடையம் :**

கூட்டமாக்கப்படாத தரவு: $M_d = \frac{(n+1)}{2}$ ஆவது உறுப்பு

கூட்டமாக்கப்பட்ட தரவு $M_d = L_1 + \left(\frac{\frac{n}{2} - F_c}{f_m}\right) \times C$

**ஆகாரம்**

கூட்டமாக்கப்பட்ட தரவு $M_0 = L_1 + \frac{\Delta_1}{\Delta_1 + \Delta_2} \times C$

நியம விலகல் $\sigma$:

கூட்டமாக்கப்படாத தரவு :

$$\sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum x^2}{n} - \bar{x}^2}$$

கூட்டமாக்கப்பட்ட தரவு :

$$\sqrt{\frac{\sum f(x-\bar{x})^2}{\sum f}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum fx^2}{\sum f} - \bar{x}^2}$$

மாறல் குணகம் (CV):

$\frac{\text{நியம விலகல்}}{\text{இடை}} = \frac{\sigma}{\bar{x}} \times 100$

ஓராயக் குணகம் = $\frac{3(\text{இடை} - \text{இடையம்})}{\text{நியம விலகல்}}$

## இரு மாறும் கணியங்களின் ஒப்பீடு :

பியர்சனின் பெருக்கல் திருப்ப இணைபுக் குணகம்

**இணைபுக் குணகம் (r):**

$$\frac{[n\sum xy - \sum x \sum y]}{\sqrt{\{[n\sum x^2 - (\sum x)^2] \times [n\sum y^2 - (\sum y)^2]\}}}$$

**இழிவுவர்க்க முறை பிற்செலவுக் கோட்டின் குணகம் (a, b):**

$$b = \frac{[n\sum xy - \sum x \sum y]}{[n\sum x^2 - (\sum x)^2]}$$

$a = \bar{y} - b\bar{x}$

### பொருளாதார மாறிகளுடனான மேலதிக நேர ஒப்பீடு

சுட்டெண்கள் :

விலைச் சார்பு $= \frac{p_1}{p_0} \times 100$

கணியச் சார்பு $= \frac{q_1}{q_0} \times 100$

பெறுமானச் சார்பு $V_{1/0} = \frac{\sum p_1q_1}{\sum p_0q_0} \times 100$

எளிய திரள் விலைச் சுட்டி $= \frac{\sum p_1}{\sum p_0} \times 100$

எளிய திரள் கணியச் சுட்டி $= \frac{\sum q_1}{\sum q_0} \times 100$

சராசரி விலைச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{p_1}{p_0} \times 100$

சராசரி கணியச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{q_1}{q_0} \times 100$

நிறையேற்றப்பட்ட திரள் சுட்டிகள்

1) அடிப்படை நிறையேற்றப்பட்ட / இலாஸ்பெயாரின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1q_0}{\sum p_0q_0} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1p_0}{\sum q_0p_0} \times 100$

2) தற்போதைய நிறையேற்றப்பட்ட / பாசேயின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1q_1}{\sum p_0q_1} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1p_1}{\sum q_0p_1} \times 100$

3) நியம நிறையைப் பயன்படுத்தல்

விலைச் சுட்டி $= \frac{\sum p_1w}{\sum p_0w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1w}{\sum q_0w} \times 100$

சார்புகளின் நிறையேற்றப்பட்ட சராசரி

விலைச் சுட்டி $= \frac{\sum[w \times I_p]}{\sum w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum[w \times I_q]}{\sum w} \times 100$

காலத் தொடர்:

பெருக்கல் மாதிரி

Y = T X S X C X R

### தொடையும் நிகழ்தகவும்

$\cup$ - ஒன்றிப்பு; A∪B என்பது A யில் உள்ள எல்லா மூலகங்களையும் B யில் உள்ள எல்லா மூலகங்களையும் குறிப்பிடுவதுடன் எந்த மூலகங்களும் இரு முறை வராது.

$\cap$ - இடைவெட்டு; A∩B என்பது A, B என்ற இரு தொடைகளிலும் உள்ள மூலகங்களைக் குறிக்கும்.

P (A) – A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

P (A/B) – B எனும் நிகழ்வு தரப்படும்போது A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

பொது விதிகள்:

P (A∪B) = P (A) + P (B) – P (A∩B)

$P(A/B) = \frac{P(A \cap B)}{P(B)}$

பின்னக எழுமாற்று மாறி ஒன்றின் எதிர்வுப் பெறுமானமும் மாறல் திறனும்:

$$E(X) = \sum(probability \times pay\ off) = \sum p \times x$$

$$VAR(X) = \sum px^2 - (\sum px)^2$$

செவ்வன் பரம்பல்:

$$Z = \frac{x - \mu}{\sigma}$$